தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : ஐப்பசி | இதழ் : 10



பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

சுவடுகள்...

சர்வதேச சிறுவர் முதியோர் மாற்றுவலுவுள்ளோர் தினம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் சர்வதேச சிறுவர்,முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு 2026.10.01 வியாழக்கிழமை கொடிகாமம் தெற்கு முன்பள்ளி மண்டபத்தில் (குவசிக்குளம்) மு.ப 11.00 மணிக்கு கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு S.A.D.D.S திசநாயக்கா (பொலிஸ் பொறுப்பதிகாரி, கொடிகாமம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். முன்பள்ளி மாணவர்கள் , சிறுவர் கழக சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், முதியோர் கழக உறுப்பினர்கள், சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் சமூக சேவைக்கிளை உத்தி யோகத்தர்கள் பங்குபற்றியதுடன் சிறுவர், முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந் நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்ட னர். இந் நிகழ்வுக்கு நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், முன் பிள்ளைப்பருவ அபி விருத்திக்கான தேசிய செயலகம், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் World Vision நிறுவனம் அனுசரணை வழங்கினர்

பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டம்

மூன்றாம் காலாண்டுக்குரிய பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டமானது 2026.10.05 திங்கட் கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் கு .ஊ சத்தியசோதி அவர்கள் தலைமையில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.



இக் கூட்டத்தில் வலயக்கல்விப் பணிமனை அதிகாரி கள், சுகாதார வைத்திய அதிகாரி ,பொலிஸ் உத்தியோகத்தர்கள் (சாவகச்சேரி, கொடிகாமம்) பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப்பீடம்), மதுவரி உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சிறுவர் பாதுகாப்பு சிறுவர் அபிவிருத்தி, சார்ந்த விடயங்கள் ஆராயப் பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் வீடு கையளிப்பு

தென் மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட கே.சுமித்திரா அவர்களின் வீட்டினை கையளிக்கும் நிகழ்வு 02.10.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. இந் நிகழ்வில் முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமை யாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். பயனாளிக்கு ரூபா 10,000.00 பெறுமதியான அத்தியவசியப் பொருட்கள் அடங்கிய பொதியும் வழங்கி வைக்கப்பட்டது.



பண்பாட்டுப் பெருவிழா



வடக்கு மாகாணப்பண்பாட்டு அலுவல்கள் அலகின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் தென்மராட்சி பிரதேச பண்பாட்டு பேரவையும் இணைத்து நடாத்தும் பண்பாட்டு பெருவிழா -2026 பண்பாட்டு பெரு விழா -2026 இன் மண்ணின் பெருமையை பறைசாற்றி நிற்கும் வாகன ஊர்திகள் சாவச்சேரி நகர் ஊடாக இராமாவில் முருகன் ஆலயத்தை அடைந்து கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டப வாயிலை அடைந்தன. பண்பாட்டுப் பெருவிழா தென்மராட்சி பிரதேச செயலாளரும் பிரதேச பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான திரு. பிரான்சிஸ் சந்திரா சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலாளர் உயர்திரு ம. பிரதீபன் அவர்களும் சிறப்பு விருந்தினராக பிரதம உள்ளக கணக்காய்வாளர்-வடக்கு மாகாணம் திருவாட்டி மு. சிவகுமாரி அவர்களும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி ப. அச்சுதன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக திருவாட்டி கி. மாலினி, மாவட்ட சிரேஸ்ட கலாச்சார உத்தியோகத்தர் அவர்களும் நட்சத்திர மஹால் உரிமையாளர் திரு த.பரமானந்தம் அவர்களும் சிற்ப கலைஞர் கலாபூஷணம் கி. கலாமோகன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் திரு. கார்த்திகேசு கமலநாதன் அரங்கத்திறப்புரையையும், உதவி பிரதேச செயலாளர் திருமதி லாகினி நிருபராஜ் வரவேற்பு ரையையும், பிரதேச செயலாளர் திரு. பிரான்சிஸ் சந்திரா சத்தியசோதி தலைமையுரையையும் ஆற்றினர்.







பண்பாட்டு விழாவில் பவனி பண்பாட்டு உர்த்திகள்

பண்பாட்டு விழாவின் கலைநிகழ்வுகள்








பண்பாட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்கள்







ஓய்வூதியர்களுக்கான இலவச புகையிரத ஆணைச்சீட்டு

தொகுப்பு:
தி. அனுஷா
(ஓய்வூதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்)

ஓய்வூதியர் ஒருவர் இலவச புகையிரத ஆணைச்சீட்டை பெற்றுக் கொள்வது தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டியவை.

* ஒருவருடத்திற்கு 03 சோடி இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும். மீள் திருமணம் செய்யப்பட்ட விதவை மற்றும் தபுதார் 01 சோடி இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை மாத்திரமே



* ஓய்வூதியரின் துணைவர் அரச சேவையில் ஈடுபடின் அல்லது இருவரும் ஓய்வூதியர்கள் ஆகும் சந்தடப்பத்தில் ஒருவருடாக மாத்திரமே புகையிரத ஆணைச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.
* குறித்த ஓய்வூதியர்களின் குடும்பத்தில் தங்கியுள்ள அங்கத்தவடகளுக்கும் உரித்துண்டு. ஓய்வூதியர்களில் தங்கியுள்ள தொழிலற்ற திருமணமாகாத பிள்ளைகளுக்கு வயதெல்லை அல்லது ஆண் பெண் பாராது புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெற முடியும். ஓய்வூதியர் திருமணமாகாத சந்தர்ப்பமொன்றின் போது அவரின் தங்கி வாழும் பெற்றோர்களுக்கும் மற்றும் சகோதரர் களுக்கும் இந்த ஆணைச்சீட்டு உரித்துண்டு.
* அனாதைகளின் மற்றும் ஊனமுற்றோர் பாதுகாவலருக்கு இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெற உரித்தில்லை.

ஓய்வூதியர் புகையிரத ஆணைச்சீட்டை இரண்டு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

1. பிரதேச செயலகமூடாக பெற்றுக்கொள்ளல்.

* சகல ஓய்வூதியர்களும் PD7 மாதிரிப்படிவம் (பிரதேச செயலகம் மற்றும் ஓய்வூதிய இணையத்தளத்தில் கிடைக்கும்) ஊடாக தமது தங்கிவாழ்வோர்களின் தகவல்களை சமர்ப்பித்து கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒன்லைன் பதிவை மேற்கொள்ளுதல் வேண்டும்.
* ஓய்வூதியரின் துணைவர் அரச சேவையில் ஈடுபடின் ஏதேனும் காரணமொன்றால் ஓய்வூதியரால் இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெறுவதற்காக பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்படுவதாயின் தமது துணைவரின் நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெறவில்லையென குறிப்பிட்ட கடிதமொன்று உரிய பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
* பதிவை மேற்கொண்டதன் பின்னர் பயணம் தொடர்பான தகவலை வழங்கி புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.
* இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு சந்தடப்பத்தின் போதும் ஓய்வூதியரின் தொலைபேசி இலக்கத்திற்கு தன்னியக்கமாக ளுஆளு அனுப்பப்படும். இதன் மூலம் உரிய அனுமதிப்பத்திர இலக்கம் (Trip ID & Warrant ID) தொடடபாக தெரிவிக்கப்படும்.

2. இணையம் ஊடாக ஒன்லைன் இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டை பெற்றுக்கொள்ளல்

* ஓய்வூதியர் மற்றும் துணைவட மாத்திரம் தனித்தனியாக அல்லது ஒன்றாக பிரயாணம் செய்யும் பிரயாணத்திற்காக இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டு பெறும் போது முழுமையாக டிஜிட்டல் செய்யப்பட்ட செயல் முறையின் கீழ் பிரதேச செயலகத்திற்கு செல்லாது ஓய்வூதிய இணையத்தளமூடாக ஒன்லைனில் இலவச புகையிரத பிரயாண ஆணைச்சீட்டு





நவராத்திரி பூஜை

எமது பிரதேச செயலக நவராத்திரி விழாவின் முதல் நாள் பூஜை பக்திபூர்வமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் பூரண கலசத்திலே அம்மனை எழுந்தருள வைத்து பூஜை வழிபாடுகள் இனிதே ஆரம்பமாகியது. இன் நிகழ்வில் பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நவராத்திரி விழாவின் இரண்டாம் நாள் பூஜை (12.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழாவின் மூன்றாம் நாள் பூஜை (13.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா நான்காம் நாள் பூஜை (14.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா ஐந்தாம் நாள் பூஜை நேற்றைய தினம் (15.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா 6ஆம் நாள் பூஜை (16.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா 7ஆம் நாள் பூஜை (17.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா 8ஆம் நாள் பூஜை (18.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





தேன்மராட்சி பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழா 9ஆம் நாள் பூஜை (19.10.2026) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.





விஜயதசமி பூஜையும் வித்தியாரம்பமும்!

மணிக்கு சிறப்பாக நடைபெற்றதுதன் மராட்சி பிரதேச செயலக விஜயதசமி பூஜை (20.10.2026) காலை 10.00 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது.



பூஜையைத் தொடர்ந்து, தென்மராட்சி பிரதேச செயலர் F.C சத்தியசோதி அவர்களினால் சிறார்க ளுக்கு ஏடு தொடக்கி வைத்து, வித்தியாரம்ப நிகழ்வு நடைபெற்றது.அதனை தொடர்ந்து கும்பம் சரித்தல் நிகழ்வு இடம்பெற்றது. மாலை கட்டுதல் ,தோரணம் கட்டுதல் மற்றும் கோலம் போடுதல் நிகழ்வில் வெற்றி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று கலைநிகழ்வுகளை நடாத்திய சிறுவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் நடைபெற்று பூஜை நிகழ்வுகள் நிறைவுற்றன.



போட்டிகளில் வெற்றி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பரிசில் வழங்குதல்



கலை நிகழ்வுகளை நடாத்திய மாணவர்களுக்கு பரிசு வழங்குதல்



சர்வதேச சிறுவர் தின நிகழ்வு



தென்மராட்சிப் பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம் சமூர்த்தி வங்கி மற்றும் world vision நிறுவனம் இணைந்து நடாத்திய சர்வதேச சிறுவர் தின நிகழ்வு 16.10.2026 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான திரு. க.இளங்குமரன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் F.C.சத்தியசோதி மற்றும் பாடசாலை அதிபர் திரு.ச.துளசிதாஸ் , ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் இணைப்பாளர் பிரகாஷ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கிராமசக்தி இணைப் பாளர், சமூர்த்தி தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமை யாளர் , world vision உத்தியோகத்தர், கட்டுப்பாட்டு சபை தலைவர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர் . மாணவர்களிற்கான கலை நிகழ்வுக ளும் இடம் பெற்றது. தொடர்ந்து மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது. மேற்படி நிகழ் வில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள், CBO தலைவர்கள், மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



வியாபார பதிவு

தொகுப்பு:
த.ரதிக்கா
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தனியார் மற்றும் பங்குடமை தொடர்பான வியாபாரங்களை வியாபாரப் பெயர்ப்பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.

1. தெளிவாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவம்
2. நடைமுறை ஆண்டிற்கான பிரதேசசபை உரிமச் சான்றிதழின் பிரதி
3. தேசிய அடையாள அட்டைப் பிரதி
4. சொந்தக் கட்டிடம் எனின் உறுதியின் பிரதி, வாடகை எனின் வாடகை ஒப்பந்தப்பிரதி, பெற்றோரின் உடமை எனின் சம்மதக் கடிதம் (Lawyer)
5. சொந்த உறுதியாயின் வரலாற்றுத்தாள்
6. கிராம நிலதாரி (GS) அறிக்கை
7. சுகாதாரப் பரிசோதகர் அறிக்கை
8. சுற்றுச்சூழல் அறிக்கை (தேவையேற்படின்)

இவ் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்று உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தி வியாபார பெயர்பதிவு சான்றிதழை பெற்றுக் கொள்ளமுடியும்.

சுவடுகள் தொடர்ச்சி...

மாம்பழம் பதனிடல் பயிற்சிநெறி

தொழிற்துறை திணைக்களம் வட மாகாணத்தினால் தென்மராட்சி பிரதேச தொழில் முயற்சியாளர்களுக்கு 06.10.2026 மற்றும் 07.10.2026 ஆகிய தினங்களில் மாம்பழம் பதனிடல் (Jam, Coordial, gReady to service. மற்றும் tomato sauce தயாரித்தல்) பயிற்சியானது ஒழுங்குபடுத்தப்பட்டு J/300 – கிராம சேவகர் பிரிவு அலுவலக மண்டபத்தில் (டச்சு வீதி, செருகல் பிள்ளையார் வீதி) தென்மராட்சி, பிரதேச செயலக கணக்காளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கணக்காளர் அவர்கள் தயாரிக்கப்பட்ட உற்பத்தி பொருட்களின் முறையினை வாழ்த்தி தொழில் முயற்சியாளர்களுக்கு உற்பத்திகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் இப்பயிற்சி நெறியின் வளவாளராக திருமதி கோமதி மாயகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். இவர்களுடன் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விதாதா அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறை திணைக்களத்தின் கச்சாய் மரவேலை பாடசாலை பொறுப்பதிகாரி, மரவேலை பாடசாலை போதனா ஆசிரியர் மற்றும் Jaffna Mango Queen Farmers Ltd உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்



போசாக்கு குறைபாடுள்ள விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான உலர் உணவுப்பொதி வழங்குதல்



வடக்கு மாகாணத்திலுள்ள நலிவுற்ற குடும்பத்திலுள்ள போசாக்கு குறைபாடுள்ள விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான போசாக்கு உலர் உணவுப்பொதி வழங்குதல் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட போசாக்கு குறைபாடுள்ள 10 மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கு ஐப்பசி மாதத்திற்கான ரூபா 10,000.00 பெறுமதியான போசாக்கினை மேம்படுத்தக்கூடிய உலர் உணவுப்பொதி ஐந்தாம் கட்டம் 07.10.2026 செவ்வாய் கிழமை சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக உதவிப்பிரதேச செயலாளர் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

பொருட்கள் பெறுகை நடைமுறை

தொகுப்பு:
லோ.ஜெசிகரன் &
ம.றெமி ஆனந்த்
(முகாமைத்துவ சேவை உத்தியோத்தர்கள்)

அரச அலுவலகம், பிரதேச செயலகம், உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அரச நிறுவனத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது பின்பற்ற வேண்டிய பொதுவான நடைமுறைகள்

கொள்வனவு நடைமுறையின் படிமுறைகள்

1. கொள்வனவுத் தேவை அடையாளம் காணுதல்
   தேவையான பொருட்கள், அவற்றின் அளவு, தரம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தீர்மானித்தல்.
2. கொள்வனவுக் கோரிக்கை சமர்ப்பித்தல்
   சம்பந்தப்பட்ட பிரிவினால் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்படும்.
3. நிதி ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துதல்
   கொள்வனவுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு உள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்.
4. விலைமனு கோருதல்
   தகுதியான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருதல்.
5. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல்
   குறிப்பிட்ட இறுதித் திகதி மற்றும் நேரத்திற்குள் விலைமனுக்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்
6. விலைமனுக்களைத் திறத்தல்
   உரிய நடைமுறைக்கு அமைவாகப் பெறப்பட்ட விலைமனுக்களைத் திறந்து பதிவு செய்தல்.
7. விலைமனுக்களை மதிப்பீடு செய்தல்
   விலை, தரம், தொழில்நுட்ப விவரக்குறிப்பு, விநியோகக் காலம் போன்றவற்றை ஒப்பிட்டு மதிப்பீடு செய்தல்.
8. கொள்வனவுக் குழுவின் பரிந்துரை
   பொருத்தமான வழங்குநரைத் தெரிவு செய்து பரிந்துரை சமர்ப்பித்தல்.
9. அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல்
   உரிய அதிகாரியிடமிருந்து கொள்வனவுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல்.
10. கொள்வனவுக் கட்டளை வழங்குதல்
    தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு உத்தியோக பூர்வ கொள்வனவுக் கட்டளை வழங்குதல்.

ஒவ்வொரு படிமுறையிலும் செய்ய வேண்டிய பணிகள்

படிமுறை 1 – விலைமனு கோரிக்கை

விலைமனு கோரிக்கை ஆவணத்தில் பின்வரும் விபரங்கள் இடம்பெற வேண்டும்:

- கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்களின் பெயர்.
- பொருட்களின் அளவு
- தொழில்நுட்ப விவரக்குறிப்புகள்
- தரநிலைகள்
- விலைமனு சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி.
- பொருட்களை வழங்க வேண்டிய காலப்பகுதி.
- கொடுப்பனவு நிபந்தனைகள்.
- உத்தரவாதம் தொடர்பான நிபந்தனைகள் பொருந்துமாயின்.

அனைத்து வழங்குநர்களுக்கும் ஒரே மாதிரியான நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

படிமுறை 2 – விலைமனுக்களைப் பெற்றுக் கொள்ளுதல்

- தகுதியான வழங்குநர்களுக்கு RFQ அனுப்புதல்.
- வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கிடைத்த விலைமனுக்களைப் பதிவு செய்தல்.
- விலைமனுக்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல்.
- கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை உரிய முறையில் பாதுகாத்தல்.

படிமுறை 3 – விலைமனுக்களைத் திறத்தல்

- நியமிக்கப்பட்ட அதிகாரிகள் முன்னிலையில் விலைமனுக்களைத் திறத்தல்.
- வழங்குநரின் பெயரைப் பதிவு செய்தல்.
- ஒவ்வொரு பொருளினதும் விலையைப் பதிவு செய்தல்.
- விலைமனு திறப்பு அறிக்கையைத் தயாரித்தல்.

படிமுறை 4 – விலைமனுக்களை மதிப்பீடு செய்தல்

கவனிக்க வேண்டியது: குறைந்த விலையை வழங்கியவர் என்பதற்காக மட்டும் வழங்குநரைத் தெரிவு செய்யக்கூடாது. பொருந்தக்கூடிய மதிப்பீட்டு நிபந்தனைகளின்படி சிறந்த பெறுமதியை வழங்கும் விலைமனுவைத் தெரிவு செய்ய வேண்டும்.

படிமுறை 5 – பெறுகைக் குழுவின் பரிந்துரை

- மதிப்பீட்டு அறிக்கையைப் பரிசீலித்தல்.
- வழங்குநர்களின் தகைமைகளை உறுதிப்படுத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கான காரணத்தைப் பதிவு செய்தல்.
- கொள்வனவுக்கான பரிந்துரையைத் தயாரித்தல்.
- உரிய அதிகாரிக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

படிமுறை 6 – கொள்வனவுக்கான அனுமதி

உரிய அதிகாரியிடம் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்:

1. கொள்வனவுக் கோரிக்கை
2. நிதி ஒதுக்கீட்டு விபரம்
3. விலைமனு கோரிக்கை ஆவணம்
4. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள்
5. விலைமனு திறப்பு அறிக்கை
6. ஒப்பீட்டு அறிக்கை
7. மதிப்பீட்டு அறிக்கை
8. கொள்வனவுக் குழுவின் பரிந்துரை.

உரிய அதிகாரியின் அனுமதி கிடைத்த பின்னரே அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும்.

படிமுறை 8 – கொள்வனவுக் கட்டளை தயாரித்தல்

அனுமதி கிடைத்த பின்னர் தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கான Purchase Order தயாரிக்க வேண்டும்.

Purchase Order இல் இடம்பெற வேண்டியவிபரங்கள்:

- Purchase Order Number
- Date of Purchase Order
- Supplier Name and Address
- Description of Goods
- Quantity
- Unit Price
- Total Amount
- Applicable Taxes
- Delivery Location
- Delivery Period
- Payment Terms
- Warranty Conditions
- Authorized Officer's Signature

படிமுறை 9 – கொள்வனவுக் கட்டளை வழங்குதல்

1. தயாரிக்கப்பட்ட Purchase Order ஐச் சரிபார்த்தல்.
2. உரிய அதிகாரியிடம் கையொப்பம் பெற்றுக்கொள்ளுதல்.
3. தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு Purchase Order வழங்குதல்.
4. Purchase Order இன் பிரதியை அலுவலகக் கோப்பில் பாதுகாத்தல்.
5. வழங்குநரிடமிருந்து கட்டளையை ஏற்றுக் கொண்டதற்கான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளுதல்.

சுவடுகள் தொடர்ச்சி...

சிரேஷ்ட பிரஜைகளுக்கான உளநல மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்



முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிரேஷ்ட பிரஜைகளுக்கான "உளநல மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" நிகழ்வானது 2026.10.22 (வியாழக்கிழமை) அன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூக சித்த மருத்துவர்களான N.ஜான்சி மற்றும் S.உதயலோஜினி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

விதாதா வள நிலையத்தால் பால் உற்பத்தி தொழில்முறை பயிற்சி



தென்மராட்சிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் பாலில் இருந்து உற்பத்தி செய்யப் படும் யோக்கட், பன்னீர் மற்றும் அடைமடோபி செய்வது தொடர்பான தொழில்முறைப் பயிற்சியானது தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் 27 மற்றும் 28 .10.2026 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றது. இதில் 25 தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்த நிகழ்வில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், NADA அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருடன் பிரதித் திட்டமிடல் பணிப்பாளரும் கலந்து கொண்டு தனது ஆலோசனையினை வழங்கியிருந்தார்.

சனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவிக்கொடுப்பனவு

சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் 16 ஆவது மருத்துவ உதவிக் கொடுப்பனவாக தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரு இளையவன் மகாலிங்கம் என்பவருக்கான மருத்துவ உதவிக் கொடுப்பனவாக ரூபா 300,000/- பெறுமதியான காசோலை கணக்காளர் அவர்களினால் 2026.10.27 ஆம் திகதியன்று வழங்கி வைக்கப்பட்டது.

